1989 ஏப்ரல் 4] [திரு. எம். அப்துல் லத்தீப்]

கொண்டிருக்கின்றன என்பதைப் படித்துப் பார்த்து, பிறகு உரியவர்களிடம் கலந்து தானே விநியோகம் செய்ய வேண்டும். வருவதையெல்லாம் சட்டமன்றத் துறையிலே விநியோகம் செய்வது என்று சொன்னால், நாங்கள் ஏதாவது பிரசுரத்தைக் கொடுக்கிறோம். அதை விநியோகம் செய்வதற்கு அவர்கள் தயார் தானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ' நீங்கள் ' என்றால் தனிப்பட்ட முறையில் திரு. அப்துல் லத்தீப் அவர்களா அல்லது அரசு சார்பிலா? அரசு சார்பில் வெளியிடுகிற கருத்து என்பதால் முதலில் சொல்லியிருக்கிறேன். இதன் தொடர்பாகச் செயலகத்திற்கு உரிய குறிப்பு வழங்கப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: நான் கேட்பது தங்களுடைய வாயிலாக, இது முறைதானா? முறையில்லை என்றால் என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் தொடர்பாக ஏற்கெனவே விடை சொல்லியிருக்கிறேன். மத்திய அரசிற்கு எழுதி, கட்சி சார்பாக வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்வோம்.

திரு. எம். அப்துல் லத்தீப்: அப்படியானால் இப்போது விநியோகம் செய்யப்பட்டவை வாபஸ் பெறப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அச்சடித்த குறிப்புகளைத் (குறுக்கீடு) திரும்பப் பெறுவது என்பது பிரச்சினை அல்ல. செயலாளரிடம் இதுபற்றிக் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, இது * * * * கோமேதகமா என்பதை நீங்கள் படித்து முடிவு எடுங்கள். அதுவரையில் எந்தவிதமான சொற்களையும் அதுபற்றிச் சொல்லி யாருடைய மனதும் புண்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தென் ஆற்காடு மாவட்டம் சோணாங்குப்பத்தில் பொதுக் கூட்டத்திற்குச் சென்ற சிலர் தாக்கப்பட்டு ஒருவர் மரணமடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த அலுவல், ஒத்திவைப்புத் தீர்மானம். மாண்புமிகு திரு. எஸ். டி. உகம்சந்த், '' 2–4–1989 அன்று இரவு தென்னாற்காடு மாவட்டம் சோணங்குப்பம் அருகில் பொதுக் கூட்டத்திற்குச் சென்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கமால் என்பவர் தாக்கப்பட்டு சரியான சிகிச்சை அளிக்கப்படாமல் இறந்திருக்கிறார் என்றும், மேலும் சிலர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்றும் தெரிவித்து இதனால் ஏற்பட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும். என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்பு கொடுத்துள்ளார். இதே பொருள் குறித்து மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்களும் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். இரண்டு பேர்களில் யாராவது ஒருவர், அதை முடிவு செய்வது நீங்களே.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, தனித்தனி கட்சிகள் சார்பில் கொடுக்கிறபோது, அந்தந்தக் கட்சியில் பலபேர் அறிவிப்புகளைக் கொடுத்திருந்தால் அவர்களில் ஒருவர் என்ற முறையில் ஒவ்வொரு கட்சிக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும், இரண்டு பேர்களில் ஒருவர் என்று பேசச் சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்தை ஏற்போம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கடலூர் அருகில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டத்திற்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொண்டர்களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தொண்டர்களும் செல்கிற நேரத்தில் அங்கே தொண்டர்கள் எல்லாம் மிரட்டப்பட்டு, அந்தக் கூட்டத்திற்குச் செல்கிறவர்களை மிரட்டுகிற ஒரு நிலைமை ஏற்பட்டு, அப்படிச் சென்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தோழர் கமான் அவர்களும், அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களும் சில விஷமிகளால் பயங்கர ஆயுதங்களால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தாக்கப்பட்ட அந்த சூழ்நிலையை எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில், அவர்கள் எந்த நோக்கத்திற்காக, ஜனநாயக உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்ற முறையில், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுடைய அந்தக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டும் என்ற முறையில், அரசினுடைய சார்பாக செய்யப்பட்டிருக்கின்ற அந்தக் கொடுமைகளை எல்லாம் சொல்லப்படுகின்ற அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ள வேண்டும் என்ற காரணத்திற்காகச்சென்ற அந்தத் தோழரை, மிகக் கொடூரமான முறையில், அவர்கள் தாக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்க வேண்டும் என்ற முறையிலே, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்கேயிருந்த தோழர்களும், மற்றவர்களும் கோரியிருந்தாலும்—அதைப்பற்றி நேற்றையதினம் நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த துணைத் தலைவர் அவர்களும் வற்புறுத்தினார்கள்—நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சரி

யான சிகிச்சை வழங்கப்படாத காரணத்தாலே, அவர் மருத்துவ மனையிலே இறக்கிற ஒரு நிலைமை ஏற்பட்டு இன்றைக்கு அங்கே பதட்ட நிலைமை நிலவுகிறது. அங்கே இருக்கிற மக்களை எல்லாம் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் மிரட்டுகின்ற அளவிற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக நாங்கள் அறிகிறோம். இந்தப் பிரச்சினையை திசைதிருப்பு கின்ற அளவிற்கு அங்கே யாராவது இதற்கு சாட்சி சொன்னா லும், அல்லது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தாலும், அவர்களும் மிரட்டப்பட்டு வருவதாக எங்களுக் குப் புகார்கள் வந்துள்ளன. எனவே, இப்படிப்பட்ட நிலைமை யில் அங்கேயிருக்கின்ற மக்களுடைய உடைமைகளுக்கும், உரிமைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை ஏற்பட் டுள்ளது. எனவே இப்படிப்பட்ட ஜனநாயக படுகொலை யைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட் டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சோணாங்குப்பத்தைச் சேர்ந்த ராமலிங்கம்-தனம் என்ற தம்பதி யினருடைய அருமைத் திருமகன் கமான், நானும் புதுவை மாநில முதலமைச்சர் பாரூக் அவர்கள் பேசுகின்ற காங்கிரஸ் பொதுக் கூட்டத்திலே வந்து கலந்துகொண்டு கருத்துரைகளைக் கேட்க வந்த இடத்திலே, கடைத்தெருவிலே வைத்து மறித்து, சைக்கிள் செயினாலும், இரும்புக் குழாய்களாலும், உருட்டுக் கட்டை களாலும் அடிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே 4 நாட் களுக்கு முன்பு, இதே சோணாங்குப்பத்தைச் சேர்ந்த சிலர் தாக்கப்பட்ட நேரத்திலே, அங்கேயிருக்கின்ற ஊர் பஞ்சாயத் துத் தலைவர் அன்பிற்குரிய நாராயணன் என்று சொல்லப்படு கிற திருமகனார், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வர், ஊர் பஞ்சாயத்துத் தலைவராக இருப்பவரிடம் போய்ச் சொன்னபோது கூட, நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. என்றாவது இவர்கள், போலீசுக்குச் சென்றால், போலீசாரிடம் கூட, ஊர் பஞ்சாயத்தைக் கூட்டி, நாங்கள் முடிவு எடுத்துக் கொள்கிறோம், ஏன் இதிலே போலீஸ் தலையிடவேண்டும் என்று சொல்கிறார்கள். இது எப்போதிலிருந்து தொடர்ந்து வருகிறது என்றால், தேர்தலிலே வாக்குகளை அதிகம் பெற்றுவிட்டது திராவிட முன்னேற்றக்கழகம் என்று சொல்கிற செய்தி வந்த வுடனே, இந்தத் தாக்குதல்கள் தொடங்கிவிட்டன என்று சொல்கிறார்கள். இந்தத் தாக்குதல்களினால், அவர்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்படுவது மட்டுமல்லாமல், இந்தக் கூட்டத்திற்கு வருகிறபோது, பூமிநாதன், குருநாதன், சுப்பிர மணியம், இரண்டு அன்புகள்,—ஒருவருடைய பெயரும் அன்பு இன்னொருவர் பெயரும் அன்பு—இன்னும் சிலர் சேர்ந்து கூடி யிருந்து அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். இங்கே நான் குறிப்பிட விரும்புவது, கூட்டத்தைக் கேட்கவருகின்றவர்களுக்கு – பேசுவதற்கு இருக்கின்ற உரிமையே மறுக்கப்படுமானால், இங்கே நாம் எவ்வளவோ வாதாடுகிறோம் — ‘‘ செல்வத்

[திரு. குமரி அனந்தன்] [1989 ஏப்ரல் 4

துள் செல்வம் செவிச் செல்வம்', அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை'' என்ற வள்ளுவர் குறளை நாள்தோறும் சபாநாயகர் அவர்களே, நீங்கள் சொல்லித்தானே இந்த அவையைத் தொடங்குகிறீர்கள். அந்தச் செவிச் செல்வத்தைப் பெற வந்தவர்களை அடித்திருக்கிறார்கள் என்று சொல்கிறபோது, பெண்களும் இதிலே அடிபட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய தாயார் அடிக்கப்பட்டு இருக்கிறார், தனம் என்று சொல்லப்படுகின்றவர். சுந்தரப்பால் என்று சொல்லப்படுகின்றவர் அடிபட்டிருக்கிறார். வெள்ளைப் பொன்னு என்று சொல்லப் படுகின்றவர் அடிபட்டு இருக்கிறார். நாங்கள் கூட்டம் முடிந்து, புதுவை மாநில முதல்வர் அவர்களும், நானும் தங்கும் விடுதிக்கு வந்தவுடனே, எங்களிடம் முன்னாள் எம்.எல்.ஏ. ஹிலால் வந்து, அவர்கள் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டு இருகிறார்கள் என்று சொன்னவுடனே, நாங்கள் போய்ப் பார்த்தோம்.

(முற்பகல் 10-20)

நானும் வெங்கடேசன் எம். பி.யும் போய்ப் பார்த்தோம். அங்கே கட்டிலிலே நினைவிழந்த நிலையிலே அவர் படுத்திருந்தார் தலையிலே அடிபட்ட காரணத்தாலே அவர் நினைவு இழந்ததாகச் சொன்னார்கள். தாடை முழுவதுமாக பிய்ந்து போய் தொங்கிக் கொண்டிருக்கிற நிலைதான் என்று சொல்கின்ற அளவிற்கு எல்லா இடங்களிலும் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அப்போது நான் அங்கிருக்கின்ற டாக்டரை அழைத்து, அவரைக் கேட்டபோது சென்னைக்குக் கொண்டுபோனால்தான் ஒரு வேளை பிழைக்கக் கூடும், அதுகூட ஐயப்பாடு தான் என்று சொல்லும்போது ஏன் இவ்வளவு நேரம் வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னோம். அவர்கள் சற்று நேரம் தயங்கிவிட்டு, இனிமேல் நீங்கள் எல்லாம் சொன்னால் நாங்கள் ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னதற்குப் பிறகு அரசாங்க வாகனத்தில் அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்க வாகனத்திலே அனுப்பியதிலே கூட, இந்த அவைக்கு நான் சொல்லவிரும்புவது, ஓட்டுநரும், அவருக்குத் துணையாக மாற்று ஓட்டுநர் ஒருவரும் தான் வந்திருக்கிறார்களே தவிர, வைத்தியம் தெரிந்தவர்கள் யாரும் அதிலே வரவில்லை. நண்பர்கள் சிலர் வந்திருக்கிறார்கள். வந்தவர்கள் எல்லாம் அவரை சென்னை ஆஸ்பத்திரியிலே சேர்க்கின்ற நேரத்தில், அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி தான் அவர்களுக்குக் கிடைத்தது. 20 வயது வாலிபன். அடுத்த மாதம் திருமணம் செய்கின்ற ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. அந்த வாலிபனை இழந்து நிற்கின்ற அண்ணா தி.மு.க. என்ற அமைப்புக்கு மட்டுமல்லாமல், ஜனநாயக உரிமையை இழந்து நிற்கின்ற ஒரு கூட்டமாக இருக்கின்றனவே என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், காங்கிரஸ்காரர்கள், தாக்கப்படுகிறார்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தாக்கப்படுகிறது. இப்போது என்னுடைய நண்பர், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் பேசுகின்ற நேரத்தில் அவர்கள் சொன்னார். பலர் கைது செய்யப்படுகிறார்

1989 ஏப்ரல் 4] [திரு. குமரி அனந்தன்]

கள் என்று. கோவையிலே நகரச் செயலாளர் கலைச்சோலை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், இன்னும் சிலர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் மணி உட்பட. இதுபோன்று எல்லாவற்றையும் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் சொல்ல வேண்டியதில்லை. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வ தெல்லாம், இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள், சம்பவங்கள் மட்டுமல்ல. அச்சுறுத்தல் சம்பவங்கள், அராஜக சம்பவங்கள் பயங்கர வெறித் தாக்குதல்கள், கொலைவெறித் தாக்குதல்கள் நடந்துகொண்டிருக்கின்றனவே, ஆதலால் இந்தப் பதட்ட நிலை எல்லா இடங்களிலும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில், இந்த பதட்ட நிலையைப் பற்றி இங்கே விவாதிப்பதற்கு இந்த அவையினுடைய பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென நானும் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் துறைமுகக் காவல் நிலைய சரகத் தைச் சார்ந்த சோணாங்குப்பம் கிராமத்திலுள்ள மீனவச் சமுதாயத்தில் சுமார் இரண்டு ஆண்டுகள் தங்கமணி என்பவர் ஊர்த் தலைவராக இருந்து வந்தார். அவர் அ.இ.அ.தி.மு.க. இயக்கத்தைச் சார்ந்தவர். கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஊர்த் தலைவர் பதவிக்கு நாராயணன் என்பவர் வந்துள்ளார். இவர் தி.மு.க.வைச் சார்ந்தவர்.

அதைப்போலவே தென்னாற்காடு மாவட்ட விசைப் படகு உரிமையாளர் சங்கத் தலைவராக விமலசேகரன் என்பவர் இருந்தார். இவர் அ.இ.அ.தி.மு.க. இயக்கத்தைச் சார்ந்தவர் அதற்குப்பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நடராஜன் என்பவர் இப்போது சங்கத்தின் தலைவராக பொறுப்பு ஏற்றுள்ளார். மேலும் சுமார் 7 அல்லது 8 மாதங்களுக்கு முன்பு ராமலிங்கம் என்பவர் மகன் கமான் என்ற அ.இ.அ.தி.மு.கவைச் சார்ந்தவருக்கும் தி.மு.கவைச் சார்ந்த குருநாதன், பூமிநாதன், வில்லியம்ஸ் ஆகியோருக்கும் மீன்பிடிக்கும்போது தகராறு ஏற் பட்டு விரோதம் ஏற்பட்டது. 2—4—1989 அன்று மாலை சுமார் 6 மணிக்கு கடலூர் முது நகர காசுக்கடைத் தெருவின் முன்பு சோணாங்குப்பம் தி.மு.க. வைச் சார்ந்தவர்கள் என்று கூறப்படும் குருநாதன், பூமிநாதன், வில்லியம்ஸ் ஆகியோர் அ. .அ.தி.மு.க. வைச் சார்ந்த கண்ணன் என்பவரிடம் கொடுத்த கடனைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் கண்ணன் அனைவரிடமும் கடன் வாங்கிக் கொண்டு திருப்பித் தராதவர் என்று அறியப் படுகிறது. கடன் தொகையைப் பற்றி கேட்டபோது தகராறு முற்றியது. அத்தோடு கலைந்து சென்று விட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அன்று 7.00 மணி யளவில் கமான் என்ற அ.இ.அ.தி.மு.க. நண்பர் பலரால் தாக்கப் பட்டிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் குறித்து தனலட்சுமி அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் கடலூர் முது நகர காவல் நிலையக்குற்ற எண்.776/89, 147, 148, 341, 324 மற்றும் 307 இ.பி.கோ. படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மேற்படி காய

மடைந்த கமான் சிகிச்சைக்காக சென்னை பொது மருத்துவ மனைக்குக் கொண்டுவரப்பட்டு, 3—4—1989 அன்று காலை 6.35 மணியளவில் இறந்துவிட்டார். எனவே குற்ற எண் 2776/89ன் கீழ் 147, 148, 324, 307 இ.பி.கோ. வழக்கை 302 இ.பி.கோ. ஆக மாற்றம் செய்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. வழக்கு விசாரணையில் உள்ளது. எதிரிகள் தலை மறைவாக உள்ளார்கள். குற்றம் செய்தவர்களில் ஒருவர் கந்தசாமியினுடைய மகன் பரசுராமன் என்பவர் கைது செய்யப் பட்டுள்ளார் என்று செய்தி வந்துள்ளது. அந்தப் பகுதியிலே போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. தற்போது அந்தப் பகுதி அமைதியாக உள்ளது. பதட்ட நிலை எதுவும் இல்லை.

நேற்று நண்பர் குமரி அனந்தன் பேசும்போது தன்னுடைய பொதுக்கூட்டத்திற்குப் பாதுகாப்பே தரப்படவில்லை, போலீஸ் பாதுகாப்பு இல்லை என்று சொன்னார்கள். அது பற்றியும் நான் விவரம் விசாரித்தேன். அந்தக் கூட்டத்திற்கு காவல் ஆய்வாளர், இன்ஸ்பெக்டர் ஒருவர், உதவி ஆய்வாளர்-சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் 4 பேர், காவலர் 10 பேர். ஆயுதப் படைக் காவலர் 30 பேர் வந்தார்கள் என்று எனக்குச் செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது போன்ற கொலைக் குற்றங்களில் குற்றவாளிகள் நிச்சயமாகத் தப்ப மாட்டார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

கோயம்புத்தூரைப் பற்றியும் அவர்களுடைய பேச்சிலே இடையிலே குறிப்பிட்டக் காரணத்தால் குறிப்பிடுகிறேன், கோவையிலே திராவிடர் கழகம் கூட்டம் நடைபெற்று, கூட்டத் திற்கு வந்தவர்கள் கலைந்து செல்லுகிற நேரத்தில் ஹக்கீம் என்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் வாலிபர், 19 வயதான ஒரு வால்பரை அங்கே ஆர். எஸ். எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கொன்று விட்டார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அதன் தொடர்பாக ஏதாவது நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம் என்று அறிகிறேன். இவை எல்லாவற்றையும் பற்றி விசாரித்து உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து, எனவே அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தலைவர் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் அவையை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது. அடுத்த அலுவல் .. ..